# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 08.08.2023**

**அசல் வழக்கு எண். 316/2011**

**பி.வா.சா. 2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தந்தை பெயர் சுப்பா நாயக்கர். எனது தாயார் பெயர் பாப்பம்மாள் என்றால் சரிதான். எனது சகோதரர்கள் பெயர் ஆழ்வார்சாமி, நாராயணசாமி என்றால் சரிதான். மேற்சொன்ன நாராயணசாமியின் மனைவி பெயர் ஜமுனா ராணி என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூல்த்தில் சர்வே எண். 426/பி ல் 58 செண்ட் தனராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 426/பி என்பது முதன்மை சர்வே எண்ணா அல்லது உட்பிரிவு சர்வே எண்ணா என்றால் அது முதன்மை சர்வே எண் அது பல சர்வே எண்களாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண். 426/பி ல் 58 செண்ட் தனராஜ்க்கு பாத்தியப்பட்டது என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. தனராஜ்க்கு எந்த உட்பிரிவின் சர்வே எண்ணின் 58 செண்ட் பாத்தியம் என்றால் அவருக்கு பாக பத்திரப்படி சர்வே எண்கள் 426/2 பி, 5 பி, மற்றும் 426 பி/6 ஆகிய மூன்று சர்வே எண்களில் மொத்தம் 62 செண்ட் பாத்தியம் அதில் 5 செண்ட்டை விற்பனை செய்துவிட்டார். சர்வே எண். 426/பி ல் மொத்தம் எத்தனை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சுமார் 29 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள சங்கரன்கோவில் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட அ பதிவேட்டில் சர்வே எண் .426/பி யின் உட்பிரிவு எண்களாக 1,3,4,7 மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது என்றாலும் அதில்

உட்பிரிவு எண்கள் 2,5, 6 குறிப்பிடபடவில்லையென்றாலும் சரிதான். சர்வே எண். 426/பி யில் உட்பிரிவுகளான 2,5 மற்றும் 6 சர்வே எண்களை சேர்த்து தான் புதிய சர்வே எண். 426/பி /2 பி2 ஏ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 426 பி/2 பி1 பி யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாயார் பாப்பம்மாள் பெயரில் உள்ளது. சர்வே எண். 426 பி/2 பி2 பி யில் உள்ள 0.01.0 ஏர்ஸ் இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது சகோதரர் நாராயணசாமியின் மனைவியான ஜமுனாரணிகக்கு பாத்தியப்பட்டது. அதேபோல் சர்வே எண். 426 பி/2 பி1 ஏயில் உள்ள இடம் 0.01.5 ஏர்ஸ் மேற்சொன்ன ஜமுனா ராணிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் தரப்பினராக இல்லாத ஞானபிரகாசம் என்பவர் பெயரில் 14 ஏர்ஸில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 426 பி/5 பி, 426/2 பி மற்றும் 426 பி/6 இல் உள்ள சொத்துக்களை ஒன்றாக இணைத் புதிய சர்வே எண்.426 பி/2 பி 2 ஏ என தனராஜ் பெயரிலும் 426 பி/2 பி1 பி என எனது தாயார் பாப்பம்ாள் பெயரிலும் மற்றம் 426 பி/2 பி2 பி மற்றும் 426 பி/2 பி1 ஏ என ஜமுனா ராணி பெயரிலும் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன பழைய சர்வே எண்கள் 426 பி/5 பி, 426 பி/2 பி மற்றம் 426 பி/6 உள்ள சொத்துகள் ஆதியில் யாருக்கு பாத்தியப்ப்டடது என்றால் சாமுவேல் உபாத்யாயா குமாரர் தானியேல் உபாத்யாயா அவர்களுக்கு பாத்தியப்பட்டது. மேற்சொன்ன 3 சர்வே எண்களும் ஒவ்வொரு சர்வே எண்களிலும் எவ்வளவு விஸ்தீரணம் இடம் இருந்ததது என்றால் சர்வே எண். 426 பி/6 ல் 1 ஏக்கர் 16 செண்ட்டும், 426 பி/5 பி யில் 63 செண்ட்டும், 426 பி/2 பி ல் 15 செண்ட்டும் இருந்தது. மேற்சொன்ன சொத்துக்களை தானியேல் உபாத்யாயா யாருக்கு விற்பனை செய்தார் என்றால் ஆபேல் குமாரர்களான டேவிட், சற்குணம், ரத்தினசாமி மற்றும் தனராஜ்

ஆகியோருக்கு மேற்சொன்ன சொத்துக்களோடு மொத்தம் 19 அயிட்ட சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார்.

2) மேற்சொன்ன சர்வே எண். 426 பி/2 பி,5 பி மற்றும் 6 ல் கண்ட சொத்துக்களை யார் யார் பாகம் பிரித்துகொண்டார்கள் என்றால் மேற்சொன்ன டேவிட், தனராஜ், சற்குணம் மற்றும் ஞானபிரகாசம் ஆகியோர் பாகம்பிரித்து கொண்டார்கள். மேற்சொன்ன பாக பிரிவினையில் டேவிட் கலந்து கொள்ளவில்லையென்றாலும் அவர்களுடைய இரண்டு மனைவிகளான கோவில்பிள்ளை மற்றும் குருவம்மாள் ஆகியோர்கள் கலந்த கொண்டார்கள் என்றால் மேற்சொனன் கோவில்பிள்ளை டேவிட்டின் மனைவி அல்ல அவர் அவருடைய மகள். மேற்படி கோவில்பிள்ளையும் குருவம்மாளும் பாகப்பிரிவினையில் கலந்துகொண்டார்கள். மேற்சொன்ன பாகபிரிவினையில் சர்வே எண். 426 பி/6 ல் உள்ள 1.16 ஏக்கரில் தனராஜ்க்கு எவ்வளவு சொத்து பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் 23 1/2 செண்ட் பாகமாக கொடுக்கப்பட்டது. அதே போல் மேற்சொன்ன சர்வே எண். 426 பி/6 ல் டேவிட்டின் மகளான கோவில்பிள்ளைக்கு எவ்வளவு இடம் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் 21 செண்ட் கொடுக்கப்பட்டது. குருவம்மாளுக்கு அதே சர்வே எண்ணில் 2 செண்ட் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன கோவில்பிள்ளைக்கு குருவம்மாளுக்கும் பாகமாக கிடைத்த 23 செண்ட்டை யாருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனது தந்தை சுப்பா நாயக்கருக்கு கொடுத்துள்ளார்கள். சர்வே எண். 426 பி/5 பி ல் மேற்சொன்ன தனராஜ்க்கு எவ்வளவு இடம் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் மொத்தம் உள்ள 63 செண்ட்டில் சரிபாதி வடபக்கம் 31 1/2 செண்ட் பாகமாக கொடுக்கப்பட்டது. அதே சர்வே எண்ணில்

மீதமுள்ள தென்பாதி சொத்து யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் மேற்சொன்ன கோவில்பிள்ளை மற்றும் குருவம்மாள் ஆகியோருக்கு பாகமாக கொடுக்கப்பட்டு அவர்களிடமிருந்து எனது தந்தை கிரையம் பெற்றுள்ளார். சர்வே எண். 426 பி/2 பி ல் தனராஜ் எவ்வளவு இடம் கொடுக்கப்பட்டது என்றால் வடபக்கம் 7 செண்ட் கொடுக்கப்பட்டது. மீதி 8 செண்ட் மேற்சொன்ன குருவம்மாளுக்கு பாகமாக கொடுக்கப்பட்டு அவரிடமிருந்து எனது தந்தை கிரையம் பெற்றுள்ளார்.

3) மேற்சொன்ன பாகபிரிவினையில் தனராஜ்க்கு சர்வே எண். 426 பி/2 பி ல் 7 செண்ட்டும், சர்வே எண்.426 பி/5 பி ல் 31 1/2 செண்ட்டும், சர்வே எண் 426 பி/6 ல் 23 1/2 செணட்டும் ஆக மொத்தம் 62 செண்ட் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.426 பி/6 ல் 58 செண்ட்டையும், 426 பி/5 பி ல் 31 1/2 செண்ட்டையும் , 426 பி/2 பி ல் 8 செண்ட்டும் ஆக மொத்தம் 97 1/2 செண்ட்டை எனது தந்தை சுப்பா நாயக்கர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன சர்வே எண் 426 பி/2 பி, 426 பி/5 பி மற்றும் 426 பி/6 உள்ள சொத்துக்களை ஒன்றாக இணைத்து 3 உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன தனராஜ்க்கு மேற்சொனன் 3 சர்வே எண்ணில் பாகப்பிரிவினையில் கிடைத்த சர்வே எண். 426 பி/6 ல் கிடைத்த 23 செண்டில் 2 1/2 செண்ட் மட்டும் புதிய சர்வே எண். 426 பி/2 பி 2 ஏல் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன சர்வே எண்ணில் தனராஜ்க்கு பாத்தியப்பட்ட மீதியுள்ள 21 செண்ட்டை எனது தந்தைபெயரில் புதிய சர்வே எண். 426 பி/2 பி1 பில் மொத்தம் 79 செண்ட்க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) அதே போல் சர்வே எண். 426 பி/5 பி ல் தனராஜ்க்கு பாகமாக கிடைத்த 31 1/2

செண்ட்க்கு பதிலாக 54 செண்ட்க்கு புதிய சர்வே எண் 426 பி/2 பி 2 ஏ என தனராஜ் பெயரில் தவறாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தை சர்வே எண் 426 பி/5 பி ல் கிரையம் பெற்ற 31 1/2 செண்ட்க்கு பதிலாக புதிய சர்வே எண். 426 பி/2 பி1 பில் 8 1/2 செண்ட்க்கு மட்டுமே பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதே போல் சர்வே எண். 426 பி/2 பில் தனராஜ்க்கு பாத்தியப்பட்ட 7 செண்டில் 5 செண்ட்டை அவர் பெயரில் புதிய சர்வே எண். 426 பி/2 பி 2 ஏ என பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அதேபோல் எனது தந்தை சர்வே எண். 426 பி/2 பி ல் கிரையம் பெற்ற 8 செண்ட்டிற்கு பதிலாக அதே சர்வே எண்ணில் தனராஜ்க்கு பாத்தியப்பட்ட 7 செண்ட்டில் 2 செண்ட்டையும் சேர்த்து எனது தந்தை பெயரில் 10 செண்டடிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் 1995 ம் ஆண்டு தனராஜ் என்பவரிடமிருந்து 2 1/2 செண்ட்டை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். தனராஜ்க்கு பாத்தியப்பட்ட 62 செண்ட்டில் எனது தாயார் கிரையம் வாங்கிய 2 1/2 செண்ட் போக அவருக்கு 59 1/2 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றாலும் ஆனால் அவர் பெயருக்கு 58 செண்ட் மட்டுமே புதிய சர்வே எண். 426 பி/2 பிஏ என பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தில் 1 1/2 செண்ட் ரோடுக்காக எடுக்கப்பட்டுள்ளது. எனது தந்தை கிரையம் பெற்ற 97 செண்ட்டில் 1.5 ஏர்ஸ் இடத்தை எனது அண்ணி ஜமுனா ராணிக்கு எனது தந்தை நன்கொடையாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தனராஜ் பெயரிலுள்ள மேற்சொன்ன புதிய சர்வே எண். 426 பி/2 பி2 ஏ ல் மொத்த விஸ்தரணமான 58 செண்ட் ஆனது அவருக்கு பழைய சர்வே எண். 426 பி/2 பி ல் கிடைத்த 5 செண்ட் 426 பி/6 ல் கிடைத்த 2 1/2 செண்ட்

மற்றும் 426 பி/5 பில் கிடைத்த 52 செண்ட்டையும் சேர்த்து அடங்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் எனது தந்தைக்கு வழங்கப்பட்ட பட்டாவில் கண்ட புதிய சர்வே எண். 426 பி/2 பி1 பி உள்ள மொத்த விஸ்திரணம் ஆன 94 செண்ட் என்பது பழைய சர்வே எண். 426 பி/2 பி - ல் 10 செண்ட்டும் 426 பி/5 பில் 8 1/2 செண்ட்டும் மற்றும் 426 பி/6 ல் 79 செண்ட்டும் அடங்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தனராஜ்க்கு பட்டா வழங்கப்பட்டுள்ள புதிய சர்வே எண். 426 பி/2 பி2 ஏ ல் உள்ள 58 செண்ட்டில் 4 ம் பிரதிவாதி சரஸ்வதி தனராஜ்ஜிடமிருந்து கீழ்கடைசி 10 செண்ட்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் 5 ம் பிரதிவாதி கணேசமுருகன் தனராஜ்யிடமிருந்து 10 செண்ட்டை கிரையம் வாங்கியபோது மேற்சொன்ன புதிய சர்வே எண் 426 பி/2 பி2 ஏ ல் கிரையம் பெறவில்லையென்றால் சரிதான்.ஆனால் பழைய சர்வே எண்களை குறிப்பிட்டு 5 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். 5 ம் பிரதிவாதி தனராஜ்மிடமிருந்து கிரையம் பெற்றபோது பழைய சர்வே எண்கள் 426 பி/6 ல் 2 1/2 செண்ட், 426 பி/5 பில் 54 1/2 செண்ட் மற்றும் 426 பி/2 பில் 5 செண்ட் ஆக மொத்தம் 62 செண்ட்டில் தான் கிரையம் பெற்றிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் 3 மற்றும் 5 ம் பிரதிவாதிகளும் தனராஜ்யிடமிருந்து அவருக்கு பாகபிரிவினையில் கிடைத்த பழைய சர்வே எண். 426 பி/2 பி ல் 7 செண்ட்டும் 426 பி/5 பில் 31 1/2 செண்ட்டும் 426 பி/6 ல் 23 1/2 செண்ட்டும் ஆக மொத்தம் 62 செண்ட்டில் கிரையம் பெற்றுள்ளதாக சொல்கிறோம் என்றால் சரிதான். தனராஜ் பெயரில் வழங்கப்பட்டுள்ள புதிய சர்வே எண். 426 பி/2 பி2 ஏ ல் உள்ள 58 செண்ட்டில் பழைய சர்வே எண்.426 பி/6 ல் தனராஜ்க்குபாத்தியப்பட்ட 23 1/2 செண்ட்டில் 2 செண்ட் மட்டுமே புதிய சர்வே எண்ணில் இணைக்கப்பட்டுள்ளது

என்றாலும் மீதமுள்ள 21 செண்ட் எனது தாயார் பெயரில் பட்டா வழங்கப்பபட்டுள்ள புதிய சர்வே எண் 426 பி/2 பி1 பி ல் உள்ள 94 செண்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் பழைய சர்வே எண். 426 பி/2 பி ல் தனராஜ்க்கு பாத்தியப்பட்ட 7 செண்ட்டில் 2 செண்ட்டை எனது தாயார் பெயரில் புதிய சர்வே எண்.. 426 பி/2 பி1 பி ல் இணைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்சொனன் வகையில் தனராஜ்க்கு பாத்தியப்பட்ட 23 செண்ட்டையும் சேர்த்து எனது தாயார் பெயரில் புதிய சர்வே எண். 426 பி/2 பி1 பி ல் மொத்தம் 94 செண்ட்க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையின் படி தனராஜ்க்கு பழைய சர்வே எண். 426 பி/5 பி ல் 31 1/2 செண்ட் மட்டுமே பாத்தியப்பட்டநிலையில் அவர் பெயருக்கு புதிய சர்வே எண். 426 பி/2 பி2 ஏல் 54 செண்ட் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள உட்பிரிவு விபரங்கள் படி சர்வே எண்.426 பி/5 பி என்பது புதிய சர்வே எண் 426 பி/5 பி1 மற்றும் 5 பி 2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன புதிய சர்வே எண். 426 பி/5 பி1 ல் 3.5 ஏர்ஸ்க்கு எனது தந்தை பெயரிலும் 426 பி/5 பி2 ல் 21 1/2 ஏர்ஸ் தனராஜ் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அதேபோல் பழைய சர்வே எண். 426 பி/6 ல் உள்ள சொத்தை புதிய சர்வே எண். 426 பி/6 ஏல் 1 ஏர்ஸ்க்கு தனராஜ் பெயரிலும் 426 பி/6 பி ல் 32 ஏர்ஸ்க்கு எனது தந்தை பெயரிலும், 426 பி/6 சி ல் 14 ஏர்ஸ்க்கு ஞானபிரகாசம் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அதேபோல் பழைய சர்வே எண். 426 பி/2 பில் உள்ள சொத்தை புதிய சர்வே எண். 426 பி/2 பி2 ல் 2 ஏர்ஸ்க்கு தனராஜ் பெயரிலும் 426 பி/2 பி1 மற்றும் 2 பி3 ஆகிய சர்வே எண்களில் கண்ட

சொத்திற்கு என் தந்தை பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தனராஜ்க்கு பாகப்பிரிவினை மூலம்பாத்தியப்பட்ட சொத்துக்களை சேர்த்து புதிய சர்வே எண். 426 பி/2 பி2 ஏ என பட்டா வழங்கப்பட்டுள்ளது நான் பழைய சர்வே எண்ணை குறிப்பிட்டு அதிலுள்ள விஸ்தீரணங்களை காண்பித்து கிரையம் வாங்கியுள்ளதால் எனது கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தனராஜ்க்கு பாத்தியப்பட்ட 23 செண்ட் தவறாக எனது தாயார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய கிரைய பத்திரத்தில் பழைய சர்வே எண்., 426 பி/5 பில் 54 செண்ட் என காட்டாமல் 311/2 செண்ட் என காட்டி உள்ளதால் அது செல்லாது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற காலத்தில் நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் பயன்பாட்டில் இல்லையென்றால் சரியல்ல. இல்லாத ஒரு சர்வே எண்ணை குறிப்பிட்டு நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 5 பணபற்று ரசீது பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பி.வாசா.ஆ-5 ஆவணத்தில் தனராஜ் கையெழுத்து மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு 2 மற்றும் 3 ம் இடைச்சொத்துக்களில் நான் கட்டிடம் கட்டுவதற்கு நான் அனுமதி பெறவில்லையென்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-9 வீட்டு வரி ரசிதில் வழக்கு சொத்தின் சர்வே எண் குறிப்பிடபடவில்லையென்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-8 கட்டிட அனுமதி வரைபடத்தில் வருவாய் ஆவணங்களில் இல்லாத சர்வே எண்ணை குறிப்பிட்டு அனுமதி பெற்றுள்ளதால் அந்த ஆவணம் செல்லது என்றால் சரியல்ல. என்னுடைய முதன்மை சாட்சியத்தில் 2010 ம் ஆண்டிலே வழக்குசொத்தில் வீடு கட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றாலும் பி.வா.சா.ஆ-6

ல் அனுமதி வரைபடம் 2011 ம் ஆண்டில் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-9 வரி ரசீதுகள் என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் வீட்டின் மின்சார இணைப்பு எண். 047-010-218. என்னுடைய வீட்டிற்கு இரண்டு மின் இணைப்புகள் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தனராஜ் 3 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 10 செண்ட் போக மீதமுள்ள சொத்தான இவ்வழக்கில் கண்ட 2,3 அயிட்ட சொத்துக்களை நான் (வாதி) கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 3 மற்றும் 5,6 பிரதிவாதிகள் பெற்ற கிரையம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3,5 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் பெயரிலுள்ள கிரைய ஆவணங்கள் குறிக்கப்பட்டுள்ள சர்வே எண்களில் உள்ள அளவுகளும் தவறானது என்றாலும் சரியல்ல. எனவே நான் கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**